# IN THE COURT OF ASSISTANT SESSIONS JUDGE, SANKARI.

**SC.No.**178/2022 **Date**: 21.04.2025.

அ.சா.1-ரத்தினவேலு

சாட்சி மீண்டும் முன்னிலையானதன் பேரில் எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி

ஆய்வாளர் என்னை விசாரிக்கும் போது கத்தி எதையும் என்னிடம் காண்பிக்கவில்லை. சம்பவத்தின் போது நான் அணிந்திருந்த உடைகளை ஆய்வாளர் கைப்பற்றினாரா என்று எனக்கு தெரியாது. சங்ககிரி அரசு மருத்துவமனையில் என்னை சிகிச்சைக்கு சேர்த்த போது நான் சுயநினைவுடன் தான் இருந்தேன். சம்பவம் நடந்ததாக சொல்லும் மேஸ்திரி காட்டிலிருந்த வீட்டின் கதவு எண்ணை நான் புகாரிலும் போலீஸ் விசாரணையிலும் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். அந்த வீட்டிற்கு கதவு எண் வழங்கப்படவில்லை. அந்த வீட்டை எப்போது கட்டினேன் என்றும் நான் புகாரிலும் விசாரணையிலும் சொல்லவில்லை. அந்த வீடு இருப்பதற்கான ஆதாரம் எதனையும் ஆய்வாளர் என்னிடம் கேட்டு வாங்கவில்லை. சம்பவம் நடந்ததாக சொல்லும் இடமான 40 செண்ட் நிலத்திற்கு நான் 2, 3 எதிரிகளிடமிருந்து பொது அதிகார பத்திரம் எழுதி வாங்கியுள்ளேன் என்றால் சரிதான். அந்த பொது அதிகார பத்திரம் எ.சா.ஆ.2. மேற்படி பொது அதிகார பத்திரத்தை வேறு ஒரு மின்வாரிய வழக்கை வாபஸ் வாங்குவதற்காக எதிரிகள் எனக்கு எழுதி கொடுத்தார்கள். மேற்படி மின்வாரிய வழக்கை நான் தான் 1 ம் எதிரி மீதும், மின்வாரியத்திற்கு எதிராகவும் சங்ககிரி மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் அ.வ.எண்.142/2018 என்ற எண்ணில் தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். அந்த வழக்கு 22.01.2021 ல் தள்ளுபடி ஆகிவிட்டது என்றால் சரிதான். சம்பவ இடத்திலிருந்து சங்ககிரி அரசு மருத்துவமனைக்கு நான் காரில் சென்றேன். அது யாருக்கு சொந்தமானது என்று எனக்கு தெரியாது. நான் மருத்துவமனைக்கு சென்று சுமார் அரை மணி நேரத்தில் போலீசார் என்னிடம் வாக்குமூலம் வாங்கினார்கள். மேற்படி வாக்குமூலத்தை எனக்கு சிறப்பு சார்பு ஆய்வாளர் மணி படித்து காண்பித்து அதில் கையொப்பம் செய்துள்ளேன் என்றால் சரிதான். 2, 3 எதிரிகளை மேற்படி புகாரின் பேரில் புலன் விசாரணை அதிகாரி கைது செய்து நீதிமன்ற காவலில் உட்படுத்தியது சம்பந்தமாக எதிரிகள் தரப்பில் இந்த சாட்சியிடம் கேள்விகள் கேட்டபோது மேற்படி சங்கதி இந்த சாட்சியை பொறுத்த வரை

கேள்விப்பட்ட சாட்சி என்பதால் அந்த கேள்வி நிராகரிக்கப்பட்டது. நான் சொன்னது போல் நான் சொன்ன இடத்தில் சொன்ன நேரத்தில் சொன்ன விதத்தில் எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. நான் எனக்கு வேண்டிய 2 நபர்களை வைத்துக்கொண்டு பொய் புகார் கொடுத்து பொய் வழக்கு பதிவு செய்துள்ளேன் என்றால் சரியல்ல. சம்பவம் நடந்ததாக சொல்லும் இடத்தை எதிரிகளிடமிருந்து அபகரிப்பதற்காக என்னுடைய செல்வாக்கை பயன்படுத்தி உருவாக்கப்பட்ட பொய் வழக்கு என்றால் சரியல்ல. எனக்கு ஏற்பட்ட காயங்கள் திட்டமிட்டு வழக்கிற்காக நானே ஏற்படுத்திக்கொண்டவை என்றால் சரியல்ல. காவல் துறையும், மருத்துவர்களும் எனக்கு ஆதரவாக செயல்பட்டுள்ளார்கள் என்றால் சரியல்ல.

ஒப்பம்/-ரத்தினவேலு

ஒப்பம்/-திரு.ந.பன்னீர்செல்வம்,
சார்பு நீதிபதி, சங்ககிரி.